# திருக்குறளில் சைவ சித்தாந்தம்

**ஆர். கஸ்தூரி ராஜா**

இவ்வுலகில் பிறந்த ஒவ்வொருவரும் தமக்குக் கிடைத்த வீடு. மனைவி/கணவன். வசதி வாய்ப்புகள் ஆகியவற்றில் மனநிறைவு கொள்வதில்லை. ஏதோ ஒன்றினை மனிதன் தேடிக் கொண்டே இருக்கிறான். முடிவில் அவைகளை அடைந்தானா எனில் அது கேள்விக்குறியே. இந்நிலையில் வாழ்க்கையில் அவனுக்கு ஏற்படும் தடைகள், அவற்றைத் தாண்ட அவன்படும் துன்பங்கள் எண்ணிலடங்கா.

உலகில் வாழும் மக்களுக்கு வாழும் வகையினை உணர்த்த, வழிகாட்ட உதவும் ஒரே நூல் திருக்குறள் எனில் மிகையாகா. உலக உயிர்களை உய்வு பெற வைக்கும் சமயம் சைவமே என்பதும் சான்றோர் முடிவாம். எனவே "திருக்குறளில் சைவ சித்தாந்தம்" என்ற தலைப்பில், சைவ சமயத்தின் மேன்மை, சித்தாந்தம் என்பதன் பொருள், திருக்குறளில், சைவ சித்தாந்தக் கருத்துக்கள் பொதிந்துள்ள பாங்கு ஆகியவைகளைப் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமெனலாம்.

**சைவத்தின் தொன்மை:** "சைவம் வரலாற்றுக்கு முற்பட்ட சமயம். அ.்.து ஆரியர்கள் இந்தியாவிற்குள் வருவதற்கு முற்பட்ட காலத்திலிருந்தே வழக்கில் இருந்து வந்திருக்கிறது" என்று ஜி.யு.போப் அவர்கள் குறிப்பிடுகிறார். கிறிஸ்த்து பிறப்பதற்கு மூவாயிரம் ஆண்டுகட்கு முன்பே சிவ வழிபாடு இருந்திருக்கிறது என்று சர். ஜான்மார்ஷல் அவர்கள் கூறுகிறார். மேலும் யூதமதம் கி.மு. 1500-1200, ஷிண்டோமதம் கி.மு. 660, சமணம் கி.மு. 599, பௌத்தம் கி.மு. 560, கான்பூஷியஸ் கி.மு. 551, கிறித்துவம் கி.பி. 4, இசுலாமியம் கி.பி. 570, சீக்கியம் கி.பி. 1469 (1977 – ஜீன் மாத திருக்கோயில் இதழ்) தோற்றுவிக்கப்பட்டது என்ற கூறுபவர்கள் சைவ சமயம் எந்த ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது என்று வரையறுக்க முடியாத தொன்மையான மதம் என்கின்றனர்.

**சங்ககாலச் சைவம்:** கி.மு. 2500 – கி.பி. 100 வரை, முச்சங்கம் இருந்தமையை வரலாற்று ஆசிரியர்களும் ஒப்புக் கொள்வர். இதுபோலவே சங்க நூல்களிலும் சிவனைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.
எடுத்துக்காட்டாக.

"ஈர்ஞ் சடை அந்தணன்" (கலி – 38)

"முக்கண்ணான்" (கலி – 2)

"கறை மிடற்று அண்ணல்" – (புறம் 55.)

என்ற அடிகளைச் சுட்டலாம். மேலும் பரிபாடல் 8, புறம் 166, ஐங்குறுநூறு கடவுள் வாழ்த்துப்பாடல், கலி 81, புறம் - 198, அகம் - 181 போன்ற பாடல்களிலும் சிவனைப் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. சிவபெருமான் செய்யும் ஐந்தொழில்களைச் சைவசித்தாத்தம் குறிப்பிடுகிறது.
இதனையே,

"எல்லா உயிர்க்கும் ஏமம்" புறம். (கடவுள் வாழ்த்து)

"கொடுகொட்டி ஆடும் கால்" கலி. (கடவுள் வாழ்த்து)

என்று குறிக்கிறது. மேலும் சிவபெருமானின் பண்புகளையும் சுட்டிக் செல்கிறது தொல்காப்பியம்.

"வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன்
கண்டது முதல்நூல் ஆகும்" (பொருள். 640)

சங்கமருவிய கால இலக்கியமான சிலப்பதிகாரத்தில் (5-169) (11-128) (40-41) (23-91) மணிமேகலையில் (1-54) சிவபெருமானின் (சிவாயநாம) என்ற அஞ்செலுத்து மந்திரம் பற்றியும், சிவ வழிபாட்டினைப் பற்றியும் சுட்டிச் செல்வதைக் காணலாம். கி.பி. 600 முதல் கி.பி. 1200 வரையுள்ள காலம் சைவ சமயத்தின் பொற்காலம் எனலாம். அவை பற்றி இயம்பின் விரியும்.

**சிவம்:** சிவம் என்ற சொல் செம்மையடியாகப் பிறந்தது. செம்மை என்பது நன்மை, நேர்மை, சிறப்பு, மங்கலம், சுகம் என்கிற பண்பினையும் செந்நிறம் என்ற நிறத்தையும் குறிக்கும் ஒரு சொல். 'சி' என்ற எழுத்து இறைவனின் கடந்து நிற்கும்

இயல்பையும், ‘வ’ என்ற எழுத்து இறைவனில் கலந்து நிற்கும். இயல்பையும் குறிப்பதால் கடவுள் என்ற சொல்லுக்குச் சிவம் என்பதே பொருளாகும். என்ற திரு.கு. வைத்தியநாதன் அவர்களின் கருத்தை இங்கு எண்ணுகிறோம். (சைவ சமய வரலாறும் பன்னிரு திருமறை வரலாறும்.ப.10)

சிவனை வழிபடும் சமயம் சைவம் என்றும், அந்த சமயத்தின் அடிப்படையில் உருவான சாத்திரங்கள் / நூல்கள் சைவ சித்தாந்த சாத்திரங்கள் எனவும் வழங்கப்படுகிறது. “தொல் சமய நிலையிலிருந்து படிப்படியாகப் பல வளர்ச்சி நிலைகளைப் பெற்று வந்த சைவ சமயமானது ஆகமங்களை அடிப்படையாகக் கொண்டு, மெய்யின் கோட்பாடாக வளர்த்தெடுக்கப்பட்டபோது தோன்றியதே சைவ சித்தாந்தம்” என்கிறார் கலாநிதி D.A மலர் (இரண்டாவது உலக இந்து சமய மாநாட்டு மலர் ப.21). சித்தம் + அந்தம் = சித்தாந்தம் என்றாகும். சித்தம் என்ற சொல் நிலை நிறுத்தப் பெற்ற உண்மை என்றும், அந்தம் என்பது முடிவு என்றும் பொருள் தரும். இவ்விரண்டு சொற்களும் இணைந்து நின்று முற்ற முடிந்த மெய்யியல் கொள்கை என்னும் கருத்தினைக் குறிக்கும். இம்முடிபிற்கு ஒரு முடிபில்லை . இதுவே ஏனைய தத்துவ சிந்தனையின் இறுதி முடிவிடம்”. (தமிழும் தத்துவமும் ப. 305) என்கிறார். சோ.ந. கந்தசாமி அவர்கள்.

**சைவ சித்தாந்தத்தின் சிறப்பு:** சிவபெருமானைப் பற்றியும். சிவனடி சேர்தற்கு உரிய நெறியையும் குறிப்பது சைவ சித்தாந்தம் என்பர். இறைவனை எளிதில் எய்துவதற்கு உரிய நெறி சைவ சித்தாந்த நெறி ஒன்றே ஆகும். இவ்வுண்மையைத் திருமூலர்.

“கற்பன கற்றுக் கலைமன்னும் மெய்யோகம்
முற்பத ஞானம் முறைமுறை நண்ணியே
சொற்பதம் மேவித் துரிசற்று மேலான
தற்பரம் கண்டுளோர் சைவசித் தாந்தமே”

என்று திருமூலர் அருளிச் செய்திருப்பதிலிருந்து சைவ சித்தாந்தத்தின் சிறப்பினை உணரலாம்.

**சைவ சித்தாந்த முப்பொருள் உண்மை:** சைவ சித்தாந்த அடிப்படையில் முப்பொருள்களை பதி, பசு, பாசம் என்பர். பதி-கடவுள், பசு-உயிர், பாசம் உயிரைப் பிணைத்துள்ள கட்டு. அதாவது ஆணவம், கன்மம், மாயை என்பன. இதனை,

“பலகலை ஈகம வேதம் யாவையினுங் கருத்துப்
பதி பசுபா சந்தெரித்தல்” (சிவப்-3)

என்ற நூற்பாவால் அறியாமல் சைவ சமயத்தில் கடவுள் சிவம் என்ற பெயரால் குறிப்பிடப்படுகிறது. தத்துவநிலையில் பதி என்று அழைக்கப்படுவதைச் சாத்திரங்கள் வழி உணரலாம்.

“சிவன் எனும் நாமம் தனக்கே உடைய
செம்மேனி எம்மான்” (திருநாவுக்கரசர் 1060)

என்ற பாடலில் இறைவன் சிவன் என்று அழைக்கப்படுவதை உணரலாம்.

**இறைவனின் இயல்பு:**மறைகளை அருளிய இறைவனின் இயல்பினை எளிமையாகக் காட்டலாம். இரவு நேரத்தில் சந்திரன் வருவதும் பகலில் சூரியன் தெரிவதும் இயற்கையாகும். ஆனால் பிறவிக் குருடருக்கு இரு சுடர்களின் அழகினை உயர்த்துதல் கடினமான ஒன்றாகும். என்றாலும் இரு சுடர் ஒளிர்வது உண்மையே. அது போலவே அறியாமை நிறைந்த நெஞ்சினார்க்கு இறைவனை உணர்த்தல் அரிதாகும். இதனை,

“காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்
கண்டானாம் தான்கண்ட வாறு” – (குறள் 849) –என்ற குறட்பாவால் அறியலாம். இதனையே,

“கன்னிகை ஒருத்தி சிற்றின்பம் வேம் பெனினும்
கைக்கொள்வள் பக்குவத்தில்
கணவன் அருள்பெறின் முனே சொன்னவாறு
என்? எனக் கருதி நகையாவள்”

என்ற தாயுமானவரின் பாடலின் மூலம் இறைவனை உணரும் பக்குவ நிலையை நாம் அடைய வேண்டும் என்பது பெறப்படுகிறது. இறை இயல்பினைப் பற்றித் திருவள்ளுவர்.

“அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு” (குறள் 1)

என்று விளக்குகிறார். உலகில் உள்ள எழுத்துக்கள் உல்லாம் ஒலி வடிவாய் உள்ள ‘அ’ கரம் ஆகிய முதலினை உடையனவாகும். அதுபோல் இந்த உலகம் அனைத்தும் ஆதிபகவன் ஆகிய முதலினையுடையது. “அம்மை அப்பரே, உலகுக்கு அம்மை அப்பர் என்று அறிக” என்று திருக்களிற்றுப்படியார் (எண்.1) இதே கருத்தை உணர்த்துகிறார். இறைவன் தன்நிலையில் சிவமாக நிற்கின்றான். இதனையே, திருவள்ளுவர் பகவன் என்கிறார். இறைவன் உயிர்களின் பொருட்டு உயிர்க்கு உதவும் அருளாற்றலையும், பகவன் என்றது அருளைவிட்டு என்றும் பிரியாது தன் கூறாகக் கொண்டுள்ள இறைவனையும் குறிக்குமெனலாம்.

“போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர்” – (திருவெம்பாவை) ஸ

“அகர உயிர் போல் அறிவாகி எங்கும்
நிகரில் இறை நிற்கும் நிறைந்தது” – (திருவருட்பயன்)

கடந்தும், உள்ளும் இருப்பதால்தான் இறைவனைக் கடவுள் என்று குறிப்பர். கடவுளின் சிறப்பியல்பினை எண்குணத்தான் என்று விளக்குகிறார் வள்ளுவர்.

**ஆதிபகவன்:** “உலகம் ஒரு முதல்வனை உடையது” பிறருக்குக் கட்டுப்படாது: தான் விரும்பிய செயலை விரும்பியவாறு செய்யும் இயல்புடையவனாலட உலகம் கட்டுப்பட்டு இயங்கும்.

**வாலறிவன் :** இயற்கை உணர்வு உடைமை. வால் என்னும் சொல் தூய்மையைக் குறிக்கும். மலக்கலப்பு இல்லாத அறிவு. தானே அனைத்தையும் உணரும் அறிவுடையவன்.

**மலர்மிசை ஏகினான்:** “தூய உடம்பின் ஆதல்” உலக உயிர்களைப் போல (மாயை காரியங்களால் ஆனது) அல்லாது மலக் கலப்பற்றுத் தூய உடம்பையுடைய திருமேனியாக விளங்குவது.

**வேண்டுதல் வேண்டாமை இலான்:** (வரம்பில் இன்பம் உடைமை) துன்பத்திற்குக் காரணம் ஆசை, என்ற கூற்றின் படி எந்தப் பொருளையும் விரும்பாமை, துன்ப அனுபவம் இல்லாமையால் இன்ப அனுபவமும் இல்லை என அறியலாம்.

“வேண்டாமை அன்ன விழுச்செல்வம்” – குறள் : 363

இறைவன் இன்பத்தை உடையவன். ஆனால் இன்பத்தை அனுபவிப்பவன் அல்லன்.

**இறைவன் :** முற்றுணர்வு உடைமை. எங்கும், எதிலும், எஞ்ஞான்றும் தங்கியிருக்கும் இயல்பினன்.

**பொறிவாயில் ஐந்து அவித்தான் :** “இயல்பாகவே பாசங்களின் நீங்குதல் உடைமை” உயிர் – ஐம்பொறிகளின் வாயிலாக அவாவினை நாடுகிறது. ஆனால் இறைவன் இயல்பாவே பாசங்களின் நீங்கினவனாக இருக்கிறார்.

**தனக்குவமை இல்லாதான்:** முடிவில் ஆற்றல் உடைமை, இறைவன் முடிவு இல்லாத ஆற்றல் உடையவனாக இருக்கிறான். உயிர்வேறு, இறைவேறு என்னும் சைவ சித்தாந்தக் கொள்கையைத் “தனக்குவமை இல்லாதான்” என்ற தொடர் தெளிவாக்குகிறது.

**அற ஆழி அந்தணன் :** பேரருள் உடைமை. அறங்கள் எல்லாவற்றையும் தனக்கு வடிவாக உடையான் என்பதைக் குறிக்கும். அறம் - அருள் : அந்தணன் - இறைவன் கருணையே பேரருள் எனினும் ஒக்கும். இந்தக் கருணையைக் கொண்ட இறைவன் ஐந்தொழில் ஆற்றகிறான் சிவாகமத்தில் சிவபெருமானின் எண் குணங்கள் இவை, இவை என்று அருளிச் செய்ததற்கு பொருந்துவனவாகத் திருக்குறளில் உள்ள முதல் ஒன்பது குறட்பாக்களும் இறைவனைக் குறித்து அமைந்துள்ளன என்பது இங்கு எண்ணுதற்குரியது. “Thiruvalluvar bases his ethics on the grand Truths Tripathartha, Pathi, Pasu, Pasam, Infact his creed is not godless creed like that of Jains of Buddhists. It this respect, there is a disparity between “Naladi” and this work”

*என்று போப்பையர் அவர்கள் குறள் நெறி* (Ethics of Kural) என்னும் ஆங்கில நூலில் கூறியுள்ள கருத்து ஆழ்ந்த சிந்தனைக்குரியது.

**உயிர் :** சைவ சித்தாந்தம் உயிரைப் பற்றித் தெளிவாக விளக்குகிறது. பொதுவாக, உயிர் என்பது ஒரு சூன்யமென்றும், ஐந்து இந்திரியங்களே ஆன்மா என்றும் அந்தக் கரணங்களே "ஆன்மா" என்றும், - பலர் பல்வேறு கருத்துகளை வழங்குகின்றனர். எது பிறப்பு இறப்பு உள்ளதோ அது சீவன் என வழங்கலாம். உயிர் என்பது பசு. ஆன்மா, சீவன் என்றும், அவ்வுயிர் எண்ணற்றன என்பதும் தெளிவாக உணரலாம். இதனை,

"பிறந்த நாள் மேலும் பிறக்கும் நாள் போலும்
துறந்தோர் துறப்போர் தொகை." (திருவட்பயன் -11) என்று உமாபதிசிவம் அருளுகின்றார்.

**உயிர் - இயல்பு :** உயிர் தனித்து நிற்கும் இயல்புடையதன்று. ஏதேனும் ஒரு பொருளைப் பற்றி நிற்பதே உயிர்க்கு இயல்பாகும். இறைவனை அன்றி, வேறு பொருள்களைப் பற்றி நிற்பதே உயிர்க்குப் பொது இயல்பாகும். கருவி கரணங்களுடன் நின்று ஐந்தவத்தைப்படுவது. உயிர்க்குப் பொது இயல்பு ஆகும். அறிவித்தாலன்றி அறிய மாட்டாததும் உயிர்க்குப் பொது இயல்பு ஆகும். "தனக்கென அறிவிலாதான்; தான் இவை அறிந்து சாரான்" (சிவப்பிரகாசம் : 64) என்று உயிர்க்கு இறைவன் பல உடல்களை வழங்குவதற்குரிய காரணமும் நவில்கிறது. மேலும்,

"ஆறிந்திடும் ஆன்மா, ஒன்றை ஒன்றினால் அறிதலானும்
அறிந்தவை மறத்தலானும், அறிவிக்க அறிதலாலும்,
அறிந்திடும் தன்மையும் தான் அறியாமையானும், தானே
அறிந்திடும் அறிவான் அன்றாம் அறிவிக்க அறிவன் அன்றே"
(சிவஞான சித்தியார் : 233)

என்ற பாடலின் மூலம் உயிரின் தன்மையும் புலப்படுவதை உணரலாம். அந்த உயிர்கள் விஞ்ஞான கலர், பிரளயாகலர், சகலர் என்று மூன்று வகைப்படும். உயிர் ஆவணவமல மறைப்புக்கு உட்பட்டு இருக்கும் நிலையைக் கொண்டு இவ்வாறு பகுக்கப்பட்டுள்ளன. இவ்வுண்மையினைத் திருவட்பயனில்.

"திரிமலத்தார் ஒன்று அதனில் சென்றார்கள் அன்றி
ஒருமலத்தார் ஆயும் உளர்" (12) என்று உமாபதிசிவம் தெளிவுபடுத்துயுள்ளார்.

திருவள்ளுவர் உயிரின் இயல்பினை,

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்." (972)

என்று நவில்கின்றார். மேலும் இறைவன் ஒருவன், உயிர்கள் பல என்ற சைவ சித்தாந்தக் கொள்கையைத் திருவள்ளுவர் பல குறட்பாக்களில் வலியுறுத்துகின்றார்.

"துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக்கொண் டற்று" (22) இதனையே,

"பிறந்தநாள் மேலும் பிறக்கும் நாள் போலும்
துறந்தோர் துறப்போர் தொகை" (திருவருட்பயன் : 11)

என்று உமாபதிசிவம் அவர்கள் அருளியுள்ளார். அதவாது ஆன்மாக்களுள் முத்தி அடைந்தவர்களின் எண்ணிக்கை உயிர்கள் இதுவரை பிறந்து வாழ்ந்த நாட்கள் எத்தனையோ, அதற்குச் சமம் ஆகும். இன்னும் முத்தி அடைய இருக்கும் உயிர்களின் எண்ணிக்கை, இனிப் பிறக்க இருக்கும் உயிர்களின் வாழ்நாட்கள் எத்தனையாக இருக்குமோ, அந்தத் தொகைக்குச் சமம் ஆகும். ஆகவே உயிர்களின் எண்ணிக்கை இத்தனை என்று அறுதியிட்டுச் சொல்ல முடியாது இதனை,

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்" (972)

என்ற குறட்பாவில் வரும் "எல்லா உயிர்க்கும்" என்பது அனைத்து உயிரையும்,

"நிலத்தியல்பான் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்
கினத்தியல்ப தாகும் அறிவு" (452)

என்ற குறட்பாவில் வரும் ‘மாந்தர்க்கு’ என்ற சொல் மனிதனையும் குறிக்கின்றதெனலாம். (அதாவது பசு, காளை, நாய், யானை போன்ற பயன்படுவனவை அடங்கும்) இறைவன் எல்லா உயிர்கட்கும் ஒரே தன்மையதான நுண்ணுடலைத் தந்து, பின்பு அந்தந்த உயிரின் விருப்பு வெறுப்புக்கேற்ற பருவுடலையும் இறைவனே தருவதால்தான் சைவசித்தாந்தம் இறைவனை அம்மையப்பராகக் கொள்கின்றது.

“நிலத்தியல்பான் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்
கினத்தியல்ப தாகும் அறிவு” (452)

என்பது போல், அருளில் இருந்து கொண்டு அருளின் உதவியால் அருளின் தன்மையை உயிர் பெறும். இ∴தே உயிரின் உண்மை இயல்பாகும்.

“பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை” (322)

“தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னயிர்க் கெல்லாம் இனிது” (68)

என்ற குறட்பாக்களின் மூலம் உயிரின் உண்மை புலனாகிறது. மேலும், உடல் வேறு, உயிர் வேறு என்பது சைவ சித்தாந்தக் கொள்கையாகும். இதனை ஓட்டை விட்டு விட்டுப் பறந்து போனதைப் போல உடம்போடு இருந்த உயிர் உடலைவிட்டுச் செல்லும் என்பதனை,

“குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு” (338) என்ற குறட்பாவால் அறியலாம்.

இறைவனை உயிர் அடையவிடாது தடுக்கின்ற பாசத்தைப் பற்றி இனிப் பார்ப்போம்.

**தளை:** இந்த உயிர் இறைவனையாடையாது தடை செய்வது தளை – ஆகும். அவை ஆணவம், கன்மம், மாயை என்னும் மூவகைப் பாசங்களாகும். இதனை,

‘விளையாததொர் பரிசில்வரு பசுபாச வேதனை ஒண்
தளையாயின தவிரவ்வருள் தலைவனது சார்பாம்
களையார்தரு கதிராயிரம் உடைய அவனோடு
முளையாமதி தவழும்உயர் முதுகுன்றடை வோமே” – (சம்பந்தர்)

என்ற பாடல் மூலம் அறியலாம். மும்மலங்களை தளை என்றும், பாசம் (கட்டுவது) எனவும் சான்றோர் வழங்குபவர்

**ஆணவமலத்தில் இயல்பு:** உயிர்க்கு அறியாமையைச் செய்யும் பொருள் ஆணவம் எனப்படும். இதனை, “அறியாமை ஆணவம்” (உண்மை விளக்கம் -22) என்னும் இரண்டே சொற்களால் திருவதிகை மனவாசங்கடந்தார் கூறியுள்ளார். ஆணவமலம் என்றொரு பொருள் இல்லாமலிருந்தால், உயிர்க்குப் பிறவித் துன்பமே ஏற்படாது. இதனை, “இருள் இன்றேல் துன்பு ஏன்?” (திருவட்பயன் : 27) என்ற உமாபதி சிவம் அவர்களின் கூற்றால் அறியலாம். சிவஞான சுவாமிகள், கீழ்நோக்கிச் செலுத்தும் ஆற்றல் மோகம், மதம், அராகம், கவலை, தாபம், வாட்டம், விசித்திரம் என ஏழு வகைகளில் செயல்படும் என்பர். அருள்நந்தி சிவம் தமது “இருபா இருப∴தில்” மோகம், அஞர், மதம், நகை, விகற்பம், கற்பம், குரோதம், கொலை என ஆணவமலத்தின் செயல்களை எட்டாகக் குறப்பிட்டுள்ளார். ஆசிரியர் மெய்கண்டார். தமது சிவஞான போதத்தின் முதல் நூற்பாவில், “ஓடுங்கி மலத்துளதாம்” எனவும், நான்காம் நூற்பாலில் “சகச மலத்துணராது” எனவும் ஆணவ மலத்தின் இயல்பினைச் சுட்டி நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படக்கம் என்னும் ஐந்தவத்தை உறுதற்கு ஏதுவாக இருப்பது ஆணவமலம் என நூல்கள் விளக்குவதை உணரலாம். சைவ சித்தாந்தம் கூறும் ஆணவ மல இயல்புகளைத் திருவள்ளுவர் தெள்ளிதின் விளக்குகிறார்.

“இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு” (குறள் 5)

என்ற குறட்பாவில் “இருள் சேர் இருவினை” – ஆணவ மலம் பற்றோடு கூடிச் செய்யும் நல்வினைகளும் தீவினைகளும் என்பதாகும். இதனையே உமாபதி சிவம் அவர்களும், “இருள் இன்றேல் துன்பு ஏன்?” (27) என்று திருவருட்பயனில்

விளக்குகிறார். ஆணவ மலம் பற்றின் காரணமாக உயிர்க்குள்ள அறியாமையை, "அறிதோறு அறியாமை கண்டற்று" (குறள் 1110) என்ற தொடரில் வரும் 'அறியாமை' என்னும் சொல் உயிர்க்குள்ள அறியாமையைக் குறிக்கும் எனலாம். ஆணவமலப்பற்று நீங்கப் பிறவித் துன்பம் நீங்கும் என்பது சைவ சித்தாந்தம் எனில் வள்ளுவரும், "இருள் நீங்கி இன்பம் பயக்கும்" (352) என்கிறார். மேலும் எதைச் செய்தாலும், ஆணவமல மறைப்புக்கு உட்படாமல் செய்ய வேண்டும் என்பதனை, "இருள் தீர எண்ணிச் செயல்" (675) என்ற வள்ளுவர் வாய்மொழி உணர்த்துவதை உணரலாம். ஆணவ மலத்தின் இயல்பினை "புல்லறிவாண்மை" என்று கூறி,

"நில்லாத வற்றை நிலையினை என்றுணரும்
புல்லறி வாண்மை கடை" (331) என்று விளக்கமும் தருகிறார் பொய்யாமொழி.

**திருக்குறள்-கன்மம்:** திருவள்ளுவர் வினை உண்மையைப் பல குறட்பாக்களில் சுட்டியுள்ளார்.

"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு" (குறள்: 5)

என்ற குறட்பாவில் இருவினை என்று சுட்டுகிறார். வினை மூவகைப்படும். அவை ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்தம் எனப்படும். அவற்றுள் ஆகாமியம் என்பது, நாமாக விரும்பிச் செய்யும் வினை என்பதைத் திருவள்ளுவர்,

"அவாஎன்ப எல்லா உயிர்க்கும்எஞ் ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து" (குறள்: 361)

என்னும் குறட்பாவில் தெளிறுத்துகிறார். இதிலிருந்து உயிரின் இச்சையே பிறப்பிற்கு காரணம் என்பது பெறப்படும். மேலும் நாமாக விரும்பிச் செய்யும் வினை என்பதும் உணர முடிகிறது. இன்னும், "அவா இல்லார்க்கு இல்லாகும் துன்பம்" (368) என்ற கருத்தும் இங்கு எண்ணத்தக்கது. மேலும் ஆகாமியத்தை உயிர்களின் விருப்பத்தால் வருகின்ற வினையென்று கூறலாம்.

**மாயாமலத்தின் இயல்பு:** மாயை என்றும் உள்ளது. அ஁து உருவம் அற்றது. மாயை ஒரே பொருளாக உள்ளது. உலகம் உண்டாவதற்கு அதுவே வித்தாக உள்ளது. மாயை சடம். அ஁து எங்கும் வியாபித்து உள்ளது. இறைவனுக்குப் பரிக்கிரக சத்தியாக உள்ளது. உயிர்களுக்கான உடலாகவும், அகக் கருவியாகவும், உலகமாகவும், போகப் பொருள்களாகவும் விரியும் தன்மை உடையதாக உள்ளது. ஆணவ மலத்தோடு கூடியுள்ள உயிர்க்கு மாயா காரியங்களோடு கூடும்போது விபரீத உணர்வு ஏற்படுவதால் மலமாக நின்று மயக்கம் தருவதாகவும் உள்ளது. பரிக்கிரக சத்தி என்பது இறைவனின் "வைப்பு சத்தி" ஆகும். சிவஞான சத்தியாரில் மாயையின் இயல்பினை,

"நித்தமாய், அருவாய், ஏகநிலையதாய், உலகத்திற்க ஓர்
வித்துமாய், அசித்தாய், எங்கும் வியாப்பியாய், விமலனுக்கு ஓர்
சத்தியாய்ப் புவன போகம் தன கரணமும் உயிர்க்காய்,
வைத்ததோர் மலமாய் மாயை மயக்கமும் செய்யும் அன்றே" (143)

என்று அருணந்திசிவம் அருளியுள்ளார். மும்மலங்களைப் பற்றிச் சிந்தித்துப் பார்ப்பின் மறுபிறப்பின் உண்மையை உணர முடிகிறது. வள்ளுவரும் எதனையும் வேண்டாமையே பிறவாமைக்கு வழி என்கிறார். (362, 363), இறைவனை வணங்க, உயிரைப் பற்றியுள்ள ஆணவம், கன்மம், மாயை இம்மூன்றுமழிந்து இறைவனடியை உயிர் சேரும், உயிருக்கு முக்தி கிட்டும்.

**முடிவுரை** : இந்த உலகைப் படைத்த இறைவன் உயிர்களை உலக இன்பங்களைத் துய்க்க அருளினான். இந்த உயிர்கள் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களில் உழன்று உண்மை அறியாது இறை நோக்கிப் பயணம் செய்ய மறந்தது. அந்நிலையில் இறையருள்கிட்ட இறைவனுடைய அருளால் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய வழிகளில் உயிர் இறைவனை அடைய வழிபாட்டில் (உடலோடு கூடிய சட்டையின் மூலம்) ஈடுபட்டது. மறுபிறப்பு உண்மையை உணர்ந்தது. தளைகளை நீக்கிவிட்டு, மும்மலங்களை விலக்கி அழியாப் பேரருள் நிறை இறை தங்கிய வீடுபேற்றைப் பெற முனைந்தது. முத்தி பெற்றது.

இறையருளால் இறையுண்மையை உணர இவ்வுலகிலேயே அழியாப் பேரின்ப வீட்டைப் பெற இயலும் என்பது மறக்க இயலா உண்மையெனலாம்.